**செ.வெ.எண்-30** **நாள் : 07.02.2020**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் வரைவு வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்தம் தொடர்பாக அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் வாக்காளர் பட்டியலுக்கான பார்வையாளர் / பதிவுத்துறை தலைவர் **திருமதி.பி.ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் (07.02.2020) நடைபெற்றது.

**149.**அரியலூர் சட்டமன்ற தொகுதியில் **125219** ஆண் வாக்காளர்களும், **125115** பெண் வாக்காளர்களும், **5** இதர வாக்காளர்களும் மொத்தம் **250339** வாக்காளர்கள் உள்ளனர். **150.**ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் **125908** ஆண் வாக்காளர்களும், **127497** பெண் வாக்காளர்களும், **2** இதர வாக்காளர்களும் மொத்தம் **253407** வாக்காளர்கள் உள்ளனர். இம்மாவட்டத்தில் **251127** ஆண் வாக்காளர்களும், **252612** பெண் வாக்காளர்களும், **7** இதர வாக்காளர்களும் ஆக மொத்தம் **503746** வாக்காளர்கள் உள்ளனர்.

அரியலூர் மாவட்டத்தில் அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் சுருக்க திருத்தம் சிறப்பு முகாம்கள் கடந்த 04.01.2020, 05.01.2020, 11.01.2020 மற்றும் 12.01.2020 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இம்முகாம்களில் படிவம் 6-ல் பெயர் சேர்த்தலுக்காக 12357 விண்ணப்பங்களும், படிவம் 7-ல் பெயர் நீக்கம் செய்வதற்கு 266 விண்ணப்பங்களும், படிவம் 8-ல் திருத்தம் செய்வதற்கு 756 விண்ணப்பங்களும் மற்றும் படிவம் 8ஏ-ல் முகவரி மாற்றம் செய்வதற்கு 565 விண்ணப்பங்களும் ஆகமொத்தம் 13947 விண்ணப்பங்கள் இருசட்டமன்ற தொகுதிகளுக்கு சிறப்பு முகாம்களில் பெறப்பட்டு, ஆய்வு செய்து வாக்காளர் பட்டியலில் சேர்கும் பணி நடைபெற்று வருகிறது. இது குறித்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் படிவங்கள் வழங்கியதையும், மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து வாக்காளர் பட்டியல் பார்வையாளர் அவர்கள் ஆலோசனை நடத்தினார். அரசிய் கட்சி பிரமுகர்கள் மற்றும் தன்னார்வலர்கள் 18-வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை, வாக்காளர்களாக சேர்க்க தீவிற முயற்சியில் மேற்கொள்ள வேண்டும். எந்த ஒரு வாக்காளர்களின் பெயரும் விடுபடாமலும் சேர்க்க வேண்டும். அரியலூர் மாவட்டம் 18-வயது நிரம்பிய புதிய வாக்காளர்கள் சேர்க்கையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என பாராட்டினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் கா.பொற்கொடி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) என்.இரவிச்சந்திரன், கோட்டாட்சியர்கள் ஜெ.பாலாஜி, அ.பூங்கோதை, வட்டாட்சியர் கதிரவன், தேர்தல் வட்டாட்சியர் கண்ணன் மற்றும் தேர்தல் பிரிவு பணியாளர்கள், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**